Registered as a Newspaper In Sri Lanka விலை ரூபா ஒன்று

# ஈழமுரசு

முரசு 1 26-1-1985 சனிக்கிழமை (இரத்தாட்சி தை 13) முழக்கம் 185

பொது சன நூலகம் யாழ்ப்பாணம்.

### யாழ்தேவி கண்ணிவெடி விபத்து

## கிளிநொச்சி ரயில் நிலைய ஊழியர் ஐவர் விசாரணையில்!

(கிளிநொச்சி)

கடந்த சனிக்கிழமை முறிகண்டியில் யாழ்தேவி ரயிலுக்குக் கண்ணி வெடிவைத்தது சம்பந்தமாக கிளிநொச்சி புகையிரத நிலைய ஊழியர்கள் ஐவர் நேற்று முன்தினம் வவுனியாவுக்குக் கொண்டு செல்லப்பட்டு பாதுகாப்புப்படையினரால் விசாரணைக்குட்படுத்தப்பட்டனர். சம்பவம் நடந்த தினத்தன்று சுமார் ஐம்பது பேர் கொழும்பு செல்வதற்கு டிக்கட் எடுத்திருந்தும், சுமார் பத்துப் பேருக்கும் குறைவான —4-ம் பக்கம் பார்க்க

# கோட்டைக்கல்லாறில் 8 பேர் சூடுபட்டு மரணம்

## 6 ஆண் சடலங்கள் ஆற்றிலிருந்து மீட்கப்பட்டன

(மட்டுநகர்)

கல்முனைக்கும் களுவாஞ்சிக் குடிக்கு மிடையில் கோட்டைக் கல்லாறு என்னுமிடத்தில் நேற்று முன்தினமிரவு ஜீப் வண்டியில் சென்ற அதிரடிப் படையினர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தினால் எட்டுப் பேர் உயிரிழந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் நால்வரின் சடலங்கள் காலையிலும், மேலும் இருவரது சடலங்கள் பின்னரும் மீட்கப்பட்டன மற்றிரு சடலங்கள் இன்னமும் மீட்கப்படவில்லை. கோட்டைக்கல்லாறுக்குள் சடலங்கள் மிதந்து வந்த பின்னரே எடுக்கப்பட்டனவாம்.

அதிரடிப்படையின் ஜீப்பில் சென்றபோது அவர்களை நோக்கிச் சுடப்பட்டதாகவும், அவர்கள் திருப்பிச் சுட்டபோது பஸ்ஸில் சென்ற தீவிரவாதிகள் மரணமானதாகவும் மட்டக்களப்பு பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

வீதியோரத்தில் வேலி அடைத்துக்கொண்டு நின்ற சிலர் பொலிஸ் ஜீப்பொன்றைக் கண்டுவிட்டு, அருகிலிருந்த ஆற்றுக்குள் பாய்ந்ததாகவும் அதனைத் தொடர்ந்து நடைபெற்ற சூட்டுச் சம்பவத்தில் எட்டு பேர் மரணமானதாகவும் நேரில் கண்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

# தூதுவர் சத்வாலுடன் ஜனாதிபதி ஒரு மணி நேரம் பேச்சுவார்த்தை

## விசேஷ தூதுவர் விரைவில் டில்லி விஜயம்; ஏழு கடற்படைவீரர் இன்று விடுதலையாவர்!

(கொழும்பு)

ஜனாதிபதி ஜெயவர்த்தன நேற்று மாலை இலங்கையிலுள்ள இந்தியத்தூதுவர் எஸ்.ஜே.எஸ். சத்வாலை அழைத்து சுமார் ஒரு மணிநேரமாக இனப்பிரச்சினை சம்பந்தமாகவும், இது தொடர்பான சில முக்கிய விடயங்கள் பற்றியும் தனிமையில் பேச்சுவார்த்தை நடத்தினர்.

இச் சந்திப்புப்பற்றி உத்தியோகபூர்வமாக எதுவும் வெளியிடப்படாத போதிலும் மிக முக்கியமான செய்தியொன்றை பாரத அரசியல் உயர் பீடத்துக்கு அனுப்பி வைப்பதற்கு ஏதுவாக ஜனாதிபதி முக்கிய விடயங்களைத் தூதுவர் சத்வாலுடன் பேசியதாக நம்பகமாகத் தெரிய வந்துள்ளது.

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உயர்மட்டப் பேச்சுவார்த்தைகளை நடத்த இந்தியா எதிர்பார்த்திருப்பதாக பாரத பிரதமர் திரு. ராஜீவ் காந்தி இரண்டுநாட்களுக்கு முன்னர் லோக்சபாவில் பேசியது தெரிந்ததே.

ஜனாதிபதி ஜெயவர்த்தனவின் விசேஷ தூதுவர் ஒருவர் வெகு விரைவில் புதுடில்லிக்கு செல்வது பற்றியும் இச்சந்திப் —4-ம் பக்கம் பார்க்க

### உரும்பராய் சடலம்

உரும்பராய் – கோப்பாய் ரோட் சந்தியில் ஒருவரது சடலம் துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுடன் கிடக்கக் காணப்பட்டது. சடலம் அப்பகுதி கிராம சேவகரால் யாழ் அரசினர் வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது இதுவரை அடையாளம் காணப்படவில்லை.

### கூட்டணி கோரிக்கை

## இடைத் தேர்தல்களை பகிஷ்கரியுங்கள்!

(சென்னை)

"இலங்கை அரசாங்கம் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் நடத்தவிருக்கும் இடைத் தேர்தல்களைத் தமிழ் மக்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து பகிஷ்கரிக்க வேண்டும்" என்று தமிழர் விடுதலைக் கூட்டணி வேண்டுகோள் விடுத்துள்ளது.

"நூற்றுக்கணக்கான தமிழர்கள் குறிப்பாக வடக்கு, கிழக்குப் பகுதிகளில் இருக்கும் அரசியல் தீவிரவாதிகள் —4ஆம் பக்கம் பார்க்க

## வல்லை வைத்தியசாலைக் கட்டடம் அதிகாலை குண்டுவைத்துத் தகர்ப்பு!

வல்லைவெளிச் சந்தியில் பல வருடகாலமாக இயங்கி வந்த கூட்டுறவு வைத்தியசாலை நேற்று அதிகாலைக்கு முன்னர் இனம் தெரியாதவர்களால் குண்டு வைத்து தகர்க்கப்பட்டது.

இதனால் பல லட்சம் ரூபா பெறுமதியான வைத்தியசாலைக் கட்டடம் நேற்றுக்காலை உடைந்து நொருங்கி இடிபாடுகளாகக் காணப்பட்டது.

சில தினங்களுக்கு முன்னர் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்தவர்கள் சிலர் இந்த வைத்தியசாலை அமைந்திருக்கும் நிலத்தின் விஸ்தீரணத்தை அளந்ததாகவும், இதனால் இக் கட்டடத்துக்கு குறிப்பிட்ட ஒரு பகுதியினர் பாதுகாப்பு வேலைகளைக் கவனிக்கவென விரைவில் குடியேறலாமெனவும் விஷயமறிந்த வட்டாரங்களில் பேசப்பட்டது.

சம்பந்தப்பட்டவர்கள் இங்கு முகாமிடுவதைத் தடுப்பதற்காகவே இக்கட்டடத்துக்கு இனம் தெரியாதவர்கள் குண்டுவைத்துத் தகர்த்ததாகவும் தெரியவந்துள்ளது. இதுசம்பந்தமாக கட்டடத்தின் நிர்வாகிகளில் சிலர் நேற்று யாழ். அரசாங்க அதிபரைச் சந்தித்து புகார்செய்தனர்.

### அரியாலையில் ஐவர் கைது

(அரியாலை)

நேற்றுக்காலை பூம்பன்குளம் புகையிரத நிலையத்துள் சீட்டாட்டத்தில் ஈடுபட்டிருந்த கே. பாலசுந்தரம், கே. நாகேந்திரன், அன்ரன், எஸ் ஆனந்தராஜா, சி. வேலாயுதர் ஆகிய ஐந்து இளைஞர்கள் சீருடையினரால் கைது செய்யப்பட்டனர்.

### சத்வாலின் குடியரசு தினச் செய்தி

## இலங்கை இந்திய நட்புறவு மேலும் விரிவாக வேண்டும்!

(கொழும்பு)

எதிர்வரும் ஆண்டுகளில் இலங்கை – இந்திய உறவும் ஒத்துழைப்பும் இருநாடுகளினதும் பரஸ்பர நம்பிக்கையின் பொருட்டு, மேலும் புதிய துறைகளுக்கு விரிவடையும் என்று தாம் நம்புவதாக இலங்கையிலுள்ள இந்தியத் —4-ம் பக்கம் பார்க்க

## ஏழு தபால் நிலையங்களில் நேற்று நடந்த கொள்ளை

மானிப்பாய், பண்டத்தரிப்பு, சங்கானை ஆகிய இடங்களிலுள்ள தபால் நிலையங்களிலும், சித்தன்கேணியிலும், நல்லூர் கோவிலடியிலும, மாவிட்டபுரத்திலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளவிலுமுள்ள உபதபால் நிலையங்களிலும் நேற்று ஆயுதம் தாங் —4-ஆம் பக்கம பார்க்க

## விரும்பிய பல பொருட்களை எடுத்துச் சென்றார்களாம்!

நேற்றுக்காலை யாழ்ப்பாண நகருக்குள் நுழைந்த சீருடையினர் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள அனேகமான வர்த்தக நிலையங்களுக்குள்ளும் நுழைந்து தமக்கு விரும்பிய பொருட்களை எடுத்துச் சென்றனராம்

சுமார் இரண்டு மணிநேரமாக —4-ம் பக்கப் பார்க்க

### பாராளுமன்றத்தில் பிரதமர் 'பிரேமா':

## தீவிரவாதிகளுக்கு தென்னிந்தியா ஆதரவு; பயங்கரவாதத்தை ஒழிக்க இதுவே தடை!

(கொழும்பு)

தென் இந்தியாவில் தீவிரவாத இளைஞர்களுக்கு ஆதரவளிக்கக் கூடாதென சகல எதிர்க்கட்சிகளும் இந்தியாவைக் கோரவேண்டும் என்று பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா அவசரகாலச் சட்டத்தை நீடிப்பது சம்பந்தமான பிரேரணைக்குப் பதில் அளித்துப் பேசுகையில் வேண்டுகோள் விடுத்தார்.

தென்னிந்தியாவில் இலங்கைத் தமிழ் தீவிரவாதிகளுக்கு ஆதரவளிக்கப்படுவதும், நிதி திரட்ட அங்கு அனுமதிக்கப்படுவதும் தான் பயங்கரவாதச் செயல்களை ஒழித்துக் கட்டுவதற்குப் பிரதான தடையாகவுள்ளன என்று கூறிய பிரதமர், சகல எதிர்க்கட்சிகளும் கருத்து வேறுபாடுகளை மறந்து தீவிரவாதிகளுக்கு இந்தியா ஆதரவளிக்கக் கூடாதெனக் கேட்கவேண்டுமென்று விளக்கினர். —4-ம் பக்கம் பார்க்க

### ஜனாதிபதிக்கு நீண்ட கடிதம்

யாழ் பிரஜைகள் குழுவினர் தற்போதைய தமிழர் நிலையை விளக்கி ஜனாதிபதி ஜெயவர்த்தனவுக்கு நீண்ட கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளனர்

# யாழ் மாவட்ட மீனவருக்கு உணவுமுத்திரைவிநியோகம்

யாழ்ப்பாண மாவட்டத்தில் அமுல் செய்யப்படும் கடற் சட்டங்களால் பாதிக்கப்பட்டிருக்கும் மீனவர்களுக்கு உணவு முத்திரை வழங்கும் வேலைகள் தற்பொழுது துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடற்றொழில் விரிவாக்க உத்தியோகஸ்தர்கள் கிராம சேவகர்கள் ஊடாகப் பெறப்பட்ட மீனவர்களின் பட்டியலின் அடிப்படையில் நிவாரண உதவிகள்வழங்கப்படுகின்றது.

சுமார் 14,000 மீனவக்குடும்பங்களைச் சேர்ந்த 70,000 பேர் இத்திட்டத்தின் கீழ் முத்திரையைப் பெறுவர்

இதனைத் தவிர நொருட்' வெளிநாட்டு முகவர் நிலையத்தின் உதவியுடன் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு உடை, உணவுப் பார்சல்களை வழங்கவும் யாழ் அரசாங்க செயலக அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

## நாளை திருநெல்வேலியில்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி அருள்மிகு சிவன்கோவில் சித்திரத்தேருக்கான பவளக்கல் பதிக்கும் பணி நாளை காலை 9-36 மணி முதல் 11-06 மணி வரையிலான சுபவேளையில் பிரபல தேர் சிற்பாசாஸ்திரியார் திருநெல்வேலி ஆறுமுகம் ஜீவரத்தினத்தால் மேற்கொள்ளப்படும்

திருப்பணிச் சபைத் தலைவர் சட்டத்தரணி திரு. சி. நாகராஜா, வித்துவாட்டி திருமதி வசந்தா வைத்தியநாதன் ஆகியோர் சிறப்புரை நிகழ்த்தவுள்ளனர்.

## தந்திகள் தபாலில்

(அரியாலை)

அரியாலை உப தபால் நிலையத்தில் ஏற்கப்படும் தந்திகள் கடந்த இரு வாரங்களாகத் தபாலில் செல்கின்றன. இத் தபால் நிலையத்திற்கு முன்பாக இருந்த தந்திக் கம்பம் பஸ் வண்டியொன்றினால் மோதப்பட்டு முற்றுச் சேதமடைந்து தொலைபேசித் தொடர்பு துண்டிக்கப்பட்டதே இதற்குக் காரணமாகும் இதனால் இப் பகுதி மக்கள் பெரிதும் சிரமத்திற்குள்ளாகின்றனர்.

## சமாதானத் தீர்வு

நவாலிப் பகுதி பாடசாலை ஒன்றில் ஏற்பட்ட மதப்பூசல் நவாலி தெற்கு சமாதான சபை மூலம் தீர்த்து வைக்கப்பட்டுள்ளது. இதனல் ஏற்பட்ட இழப்புக்களும் சமாதான சபையால் வழங்கப்பட்டதாக நவாலி தெற்கு சமாதான சபையின் அமைப்புச் செயலாளர் திரு. ந. யோகநாதன் அறிவித்துள்ளார்.

## பசுபிக றிவர் மாவுடன் வருகிறது

திருமலை பிறிமா ஆலையில் இருந்து 950 தொன் மாவுடன் பசுபிக் றிவர் என்ற கப்பல் இம் மாதம் இருபத்தெட்டாம் திகதி, காங்கேசன்துறை துறைமுகத்துக்கு வருகிறது.

# பட்டாசு கொளுத்தியவர்கள் பதமாக வாங்கினர்களாம்

(அச்சுவேலி)

அமைதியான இரவுவேளையில் பட்டாசு வெடி கொளுத்தி வேடிக்கை பார்த்த இருவர் பதமாக வேண்டிக் கட்டினர்.

இரவுவேளையில் திடீர் என்று கேட்ட வெடிச் சத்தம் குறிப்பிட்ட பகுதி மக்களை பதற்றமடையச் செய்தது ''என்னவோ? ஏதோ' என்ற அச்சத்தின் மத்தியில் நாலுதிசகும் ஓடியவர்கள் இருட்டு வேளையில் பல்வேறு விதமானகாயங்களுக்கும் உள்ளானுர்கள்.

பின்னர் உண்மைநிலையை அறிந்து தமது வீடுகளிற்கு திரும்பியவர்கள் ''பட்டாசு வெடி'' கொளுத்தியவர்களை தேடிப் பிடித்து தமது ஆத்திரத்தை தீர்த்துக் கொண்டனர்.

சந்தர்ப்பம் சூழ்நிலை அறியாமல் இரவில் பட்டாசுவெடி கொளுததியவர்களும் தமது தவறை உணர்ந்து கொண்டனர். இது அச்சுவேலி தெற்குப் பகுதியில நடந்தது.

## இளைஞர் கைது!

(சுண்டுக்குளி)

யாழ் கச்சேரியடி வை. எம். சீ ஏ. அருகில் நின்ற இளைஞரொருவர் ராணுவத்தினரால் கொண்டு செல்லப்பட்டார். நேற்று முன்தினம் கண்டி வீதியால் வந்து கொண்டிருந்த இராணுவத்தினர் கவச வண்டிகள் சகிதம் வை. எம். சீ ஏ அருகில் ஐந்து நிமிட நேரம் தரித்து நின்றபோதே வீதியால் வந்து கொண்டிருந்த இளைஞரைக் கைது செய்து தமமுடன் கொண்டு சென்றனர்.

யாழ். மக்களுக்கோர் மகிழ்ச்சியான செய்தி!

உங்கள் வெளிநாட்டுப் பிரயாணத்திற்கான பிரயாணச் சீட்டுக்களை யாழ். நகரிலேயே பதிவு செய்து கொள்ள — நம்பிக்கையாக நாடுங்கள்

CROSS TRAVEL SERVICES (PTE) LTD.,

Stage II, Model Market, No. 5, 1st Floor, Bus Stand, Centre Road, Jaffna.

குறிப்பு:

I பிரான்ஸ், கனடா, பேர்லின், ஹொலன்ட் (HOLLAND) பிரயாணங்களுக்கான சகல ஒழுங்குகளும் உடன் செய்து கொடுக்கப்படும்.

II கொழும்பிலிருந்து லண்டன் செல்வதற்கான ஒழுங்குகளை ரூபா 20,000/- உடன் செய்து கொள்ளுங்கள்.

( CMB / LON / CMB - One Year Return Special fare Rs. 20,000/- only)

முக்கிய குறிப்பு:

கனடா செல்வதற்கான சகல ஒழுங்குகளும் ரூ 72,000 செலவில் உடனடியாகச் செய்து கொடுக்கப்படும்.

Phone: 22040, 22065, 22816, 22817 Telex: 22207 (CTS) CE

உங்கள் இல்லத்திற்குத் தேவையான சகல விதமான மின்சாரப் பொருட்கள், சமையலறை உபகரணங்கள், ஆடம்பரப் பொருட்களை மலிவு விலையில் பெற்றுக்கொள்ள

CROSS TECHNICAL SERVICES

## பிறந்தநாள் வாழ்த்து

✳ உடுப்பிட்டி, இமையாணன் திருநாவுக்கரசு கமலாதேவி தம்பதிகளின் மகள் கார்த்திகா இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✳ மிருசுவில் பிரான்சிஸ் தவமணி தம்பதிகளின் மகன் தோமஸ் எடிசன் இன்று தனது பன்னிரண்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✳ யாழ் இரண்டாம் குறுக்குத் தெரு செயின்தம்பி தஹிரா தம்பதிகளின் மகன் முகமது ஸபூ இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✳ யாழ்-றக்கா வீதி ஜெகநாதன் மல்லிகா தம்பதிகளின் மகள் அயோனு ஷியாமா இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✳ யாழ் கொய்யாத்தோட்டம் யோசப் ரேஸ்மலர் தம்பதிகளின் மகள் அனிதா இன்று தனது எட்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✳ ஏழாலை தெற்கு பவளத்துரை பெரியநாயகி தம்பதிகளின் மகன் பரணீதரன் இன்று தனது இரண்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✳ கொக்குவில் பொற்பதி வீதி சிவ அருள்நாதன் மீராவதி தம்பதிகளின் மகன் சஞ்ஜயன் இன்று தனது எட்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✳ சிறுப்பிட்டி மேற்கு நடராசா கமலாதேவி தம்பதிகளின் மகள் பிரியதர்சினி இன்று தனது இரண்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

# யுனிசெப் நிதிதிட்டத்தின்கீழ் சிறுவர்களுக்கு பரிசோதனை

(நல்லூர்)

யூனிசெப் நிறுவனத்தின் நிதி உதவியுடன் யாழ் மாநகராட்சி மன்றம் மேற்கொண்டு வரும் சிறுவர் நலச் சேவைத் திட்டத்தின் கீழ் சிறுவர் பரிசோதனை நிலையமொன்று அரியாலை மேற்கு காந்தி சனசமூக நிலைய வெள்ளி விழா அரங்கில் நடாத்தப்பட்டது

அரியாலை, நல்லூர் பகுதிகளைச் சேர்ந்த தாய்மார்கள் தங்களது குழந்தைகளை இப் பரிசோதனை நிலையததுக்குக் கொண்டு வந்து வைத்திய பரிசோதனைகளைச் செய்வித்தனர்.

யாழ். மாநகராட்சி மன்ற சுகாதார வைத்தியர்களின் ஆலோசனையின் கீழ் யாழ். மாநகராட்சி மன்ற சுகாதார வைத்திய நிலைய தாதிகளும், பணியாட்களும் இந்த வைத்திய நிலையத்தில் பணி புரிந்தனர்.

## காதர் தலைவரானுர்

(மன்னார்)

மன்னார் மூர் வீதி கிராம அபிவிருத்திச் சங்கததின் தலைவராக ஜனப் எம். ஏ காதர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இலங்கைக் காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் மன்னார் மாவட்ட அமைப்பாளராகக் கடமையாற்றும் இவர் மன்னார் அல அஸஹர் மகா வித்தியாலயத்தின் அபிவிருத்திச் சபை செயலாளராகவும், மன்னார் மக்கள் முன்னேற்றக் கழகத்தின் செயலாளராகவும், மன்னார் மாவட்ட நலன் நோககுச் சங்கத்தின் உறுப்பினராகவும் பணியாற்றி வருகிறார்.

## திருப்பலி

(குருநகர்)

அகால மரணமடைந்த வண. பிதா எம். பஸ்ரியன் அடிகளாரின் ஆன்ம சாந்தி வேண்டி குருநகர் சீநோர் வலைத் தொழிற்சாலை ஊழியர்கள் வண. பிதா போல நடசத்திரம் அடிகளாரால் திருப்பலிப் பூஜை ஒப்புக் கொடுக்கப்படும நிகழ்ச்சி ஒன்றைச் சமீபத்தில் தொழிற் சாலையில் நடத்தினர்கள்.

## வரி விளம்பரம்

### ஸ்ரீ சக்கரம்

சகலவித தோஷங்களுக்கும், சௌபாக்கியங்களுக்கும் சாஸ்திர முறையில் செய்த ஸ்ரீ சக்கரம் பெற்றுக்கொள்ளலாம்.

ஏல விற்பனை நிலையம் கோப்பாய்.

### வாடகைக்கு

கச்சேரிக்கு சமீபமாக தண்ணீர், லைற் வசதிகளுடன் அனெக்ஸ் வாடகைக்குண்டு. பெண்கள், மாணவியருக்கு உகந்தது தவம் 110/2 கண்டி றோட், யாழ்ப்பாணம்

## நன்றி நவிலல்



திருமதி அன்னம்மாப்பிள்ளை சங்கரப்பிள்ளை

எம்மைப்பிரிந்து இறைவனடி எய்திய செய்தகேட்டு பதற்றமான ஊரடங்கு வேளையிலும வருகை தந்தும், அனுதாபச் செய்திகள் அனுப்பியும் பலவழிகளிலும் உதவிகள் புரிந்தும் ஆறுதல் நல்கி அவர் ஆதமசாந்திக்கு உழைத்த அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத தெரிவித்துக் கொள்கின்றோம்.

மககள், மருமக்கள்

1ம் கட்டை
டச்சு வீதி
சாவகச்சேரி

மாதாந்தம் 36% வட்டி விழாக்கால சலுகை!

15-12-84 முதல் 30-01-85 வரை

36% அதிக வட்டி வழங்கும் நிதி நிறுவனம் தமிழர் நிதியம் 140, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். ☎ 22437

உறுதியான பாதுகாப்பிற்கும், மேலதிக லாபத்திற்கும் எம்மிடம் வைப்பிலிடுங்கள்.

ஈழமுரசு

26—1—1985 3

### உதய சிந்தனை

இலங்கையால் இந்தியாவின் சுதந்திரத்தை எவ்விதத்திலும் தடுத்து விட முடியாது. இலங்கை எந்த பெரிய நடவடிக்கையை எடுத்துக் கொண்டாலும் இந்தியா அதைக்கண்டு ஒரு நாளும் பயந்துவிடாது

- நேருஜி: (1940ம் ஆண்டு)

37, கண்டி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23336

## இதய ஒலி

26-1-85 சனிக்கிழமை (இரத்தாக்ஷி தை 13)

# தூதுவரின் நம்பிக்கையே எமது நம்பிக்கையும்

ஜனநாயகம், சோஷலிஸம், மனித சுதந்திரம் என்பசெல்லாம் வெறும் வார்த்தை ஜாலங்களாகவே உலக அரசியலில் இன்று தோற்றமளிக்கின்றன.

தேர்தலில் வெல்வதற்கும், ஆட்சியைக் கைப்பற்றுவதற்கும் இச்சொற்பதங்களைப் பயன்படுத்துபவர்கள் ஆட்சியில் அமர்ந்த பின்னர் இவைகளை மறந்து விடுவது வழக்கம்.

இவ்விஷயத்தில் பாரதம் முற்றிலும் மாறுபட்டதாகவும், பண்டு தொட்டு இன்று வரை ஜனநாயகத்துக்கு ஒரு முன்னுதாரணமாகவும் விளங்கிவருகின்றது.

உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடாக மட்டுமன்றி, உன்னதமான ஜனநாயக உபகண்டமாகவும் பாரதம் துலங்கி வருகின்றது.

கத்தியின்றி, இரத்தமின்றிப் பெற்ற சுதந்திரத்தை மக்களை மக்களே மக்கள் விருப்புக்கேற்றவாறு நடத்தும் ஜனநாயக கோட்பாட்டின் கீழ் பாரத அரசியல் தலைவர்கள் பேணிக்காத்து வருவதாலேயே உலக அரங்கில் பாரதம் தனிச்சிறப்புப் பெற்று மிளிருகின்றது.

அண்ணல் மகாத்மா காந்தி முதல், அன்னை இந்திரா காந்தி ஈறாக அனைவருமே பாரத மக்களின் சுதந்திரத்தைக் கட்டிக்காப்பதில் தமது உடல், பொருள், ஆவி மூன்றையும் தியாகம் செய்தனர்.

பாரதத்தின் முதல் பிரதமரான நவபாரதத்தின் சிற்பி ஜவஹர்லால் நேருவிலிருந்து இன்றைய பிரதமர் நேருவின் பேரன் ராஜீவ்காந்தி வரையான அனைத்து இந்தியத் தலைவர்களுமே பாரதத்தின் பாரம்பரியமான ஜனநாயகத்தின் மீது சத்தியப்பிரமாணம் செய்து மக்களால் வழங்கப்பட்ட அதிகாரத்தைப் பெற்று ஆட்சிக்கு வந்தவர்கள்.

பாரதத் தலைவர்களின் அகிம்சைப் போராட்டமே இலங்கைக்கும் சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுத்ததென்பது வரலாற்றாசிரியர்கள் எடுத்துக் கூறியுள்ள உண்மை.

இன்று பாரதத்தின் குடியரசு தினமாகும். வரலாற்றுப் பெருமை பெற்ற இந்நன்னாளில் ஜனநாயக பாரதத்தை உருவாக்கியவர்களை ஆத்மார்த்தமாக நினைவு கொள்வோம்.

இலங்கையின் அண்டைநாடு என்பதால் பாரதத்தின் மீது எமக்கு எப்போதுமே விசுவாசமுண்டு.

ஆபத்துக்கு உதவும் அயல்நாடு என்பதால் பாரதத்தின் மீது எப்போதுமே நம்பிக்கையுண்டு.

இலங்கையில் வாழும் தமிழர்களும், சிங்களவர்களும் பாரதத்திலிருந்து வந்தவர்கள் என்பதால் இரு நாடுகளுக்குமிடையே பிரிக்க முடியாத உறவுண்டு.

கலை, கலாசார, மத பாரம்பரியங்களால் பிணைக்கப்பட்ட இரு நாடடுப் பழக்கவழக்கங்களும் இரட்டைக் குழந்தைகள் போன்றவை.

இதனாலேயே, இங்கு ஏற்படும் பிரச்சினைகளை பாரதம் தனக்கு ஏற்பட்ட பிரச்சினை போன்று முதலிடம் கொடுத்து கரிசனை செலுத்துகிறது.

பாரதமாதா இந்திராகாந்தி மறைந்தபோது ஈழமக்கள் அடைந்த சொல்லொணாத் துயரம் அந்த நாட்டின் மீது நாம் கொண்டிருந்த அந்நியோன்ய உறவை எடுத்துக்காட்டிற்று.

பாரதம் கட்டிக்காத்து வரும் ஜனநாயக பாரம்பரியத்தினால் தான், இலங்கையில் ஜனநாயகம் கொஞ்சமாவது தப்பிப் பிழைத்திருக்கிறதென்பது பலரதும் நம்பிக்கை.

பாரதம் கடைப்பிடித்து வரும் அன்பு, அகிம்சை, சமாதானம், சகோதரத்துவம் ஆகியவைதான் இரு நாடுகளுக்குமிடையே தொடர்ந்தும் நல்லுறவை ஏற்படுத்திவரக் காரணமாகும்.

''எதிர்வரும் ஆண்டுகளில் இந்திய-இலங்கை உறவானது, இருநாடுகளினதும் பரஸ்பர நம்பிக்கையின் பொருட்டு மேலும் பல புதிய துறைகளுக்கு விரிவடையும் எனத் தாம் நம்புவதாக'' தூதுவர் சத்வால் தமது குடியரசு தினச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அதுவே எமது நம்பிக்கையும் கூட!

### ஜெயில்சிங் - அல்போன்ஸ் சந்திப்பில் உறுதி

# இந்துமாக்கடலில் அமைதி: ஆர்ஜன்டீனா பூரண ஆதரவு

(புதுடில்லி)

''இந்து மாக்கடல் அமைதிப் பிரதேசமாக வேண்டும் என்று பாரதம் மெய்யான ஆர்வம் கொண்டுள்ளது'' என்று பாரத ஜனாதிபதி திரு. ஜெயில்சிங் நேற்று ஆர்ஜன்டீனா ஜனாதிபதி டாக்டர் அல்போன்ஸைச் சந்தித்து உரையாடிய போது தெரிவித்தார். ஆர்ஜன்டீனாவும், பாரதமும் சர்வதேச ரீதியிலான பல பிரச்சினைகளிலும் ஒருமித்த கருத்தையே கொண்டுள்ளன என்று இரு தலைவர்களும் திருப்தி தெரிவித்துக் கொண்டனர். ஆர்ஜன்டீனாவும் இந்து மாக்கடல் அமைதிப் பிராந்தியமாவதற்கு ஆதரவு தரும் என்று டாக்டர் அல்போன்ஸ் உறுதியளித்தார்.

பிரதமர் திரு. ராஜீவ் காந்தியை ஆர்ஜன்டீனா ஜனாதிபதி சந்தித்துச் சம்பாஷித்தபோது பாரதத்தினதும் தெற்காசியாவினதும் நிலையினை திரு ராஜீவ் காந்தி அவருக்கு விரிவாக எடுத்துரைத்தார்.

''பாகிஸ்தானுடன் நட்புறவை வளர்க்கவே பாரதம் விழைகிறது. இலங்கையின் உள் விவகாரங்களிலும் பாரதம் கண்டிப்பாகத் தலையிடாது'' என்றும் பிரதமர் ஆர்ஜன்டீனா ஜனாதிபதியிடம் எடுத்துச் சொன்னார்.

இம்மாதம் 28ம் திகதி புதுடில்லியில் அணு ஆயுதப்பரிகரணம் தொடர்பாக பாரதம் ஆர்ஜன்டீனா உட்பட ஆறு நாடுகள் கலந்து கொள்ளவுள்ள உச்சி மாநாடு குறித்தும் இருவரும் கருத்துப் பரிமாறிக் கொண்டனர்.

## மாஸ்கோ பயணம்

(புதுடில்லி)

இன்று சோவியத் யூனியனில் பாரதக் குடியரசு தினம் கொண்டாடப்படும் போது அதில் கலந்து கொள்வதற்கென பாரத முன்னாள் மந்திரி திரு. சிவசங்கர் தலைமையிலான பிரதிநிதிகள் குழு ஒன்று மாஸ்கோ சென்றுள்ளது.

### நிக்கராகுவா புரட்சி இயக்கம்

# அமெரிக்காவினது ஆதரவு தற்காலிகமானதே-றீகன்

(வாஷிங்டன்)

''நிக்கராகுவாவின் புரட்சி இயக்கத்துக்கு அமெரிக்கா



உதவியளித்து வருவது ஒரு தற்காலிகமான நடவடிக்கையே'' என்று அமெரிக்க ஜனாதிபதி திரு. றொனல்ட் றீகன் நேற்றுத் தெரிவித்தார்.

நிக்கராகுவாவிற்கு சில நாடுகள் அளித்து வரும் உதவிகளால் மத்திய அமெரிக்காவின் பாதுகாப்புக்கே அச்சுறுத்தல் உருவாகியுள்ளது என்றும் இதில் ஈரானின் பங்களிப்பும் குறிப்பிடத்தக்க ஒன்று என்றும் திரு. றீகன் மேலும் தெரிவித்தார்.

## ''மத்திய-மாநில உறவில் உறுதி வேண்டும்''

(புதுடில்லி)

''மத்திய-மாநில உறவுகள் வலுப்பட வேண்டும்'' என்று பாரதக் கம்யூனிஸ்ட்கட்சியின் தேசிய சபை கோரியுள்ளது.

பஞ்சாப், அஸாம் பிரச்சினைகளுக்கு விரைவான தீர்வு காணப்பட வேண்டும் என்றும் கோரியுள்ள இச்சபை பிரதமர் பெற்ற பெரும் தேர்தல் வெற்றி குறித்து பாராட்டும் தெரிவித்துள்ளது.

### மாஜி இஸ்ரேலிய மந்திரி தொடுத்த

# 'டைம்' சஞ்சிகைக்கு எதிரான நஷ்டஈடு வழக்கு தள்ளுபடி

(வாஷிங்டன்)

அமெரிக்காவின் புகழ்பெற்ற சஞ்சிகையான 'டைம்'முக்கு எதிராக இஸ்ரேலிய முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் திரு. அரியல் சரோன் தாக்கல் செய்திருந்த நஷ்டஈடு கோரும் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

தனது பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கைகளை விமர்சித்ததன் மூலம் தனக்கு அபகீர்த்தியை இச்சஞ்சிகை உண்டாக்கிவிட்டதாகவும் ஐம்பது மில்லியன் டாலர் நஷ்டஈடு தரப்பட வேண்டும் என்றும் திரு. சரோன் இவ்வழக்கில் கோரியிருந்தார்.

திரு சரோனுக்கு அவமானம் தர வேண்டுமென்று உணர்ந்து 'டைம்' சஞ்சிகை இச்செய்தியை வெளியிட்டதாகக் கருத முடியாது என்று கூறி வழக்கை விசாரித்த பிரதம நீதிபதிகளும் ஏகமனதாக வழக்கைத் தள்ளுபடி செய்தனர்.

### ரி. வி. யில் இந்திரா இறுதியாத்திரை

# ''எம்.ஜி.ஆர் கண்கலங்கினார்'' நியுயோர்க் தரும் தகவல்

(நியுயோர்க்)

தமிழக முதலமைச்சர் திரு எம். ஜி. இராமச்சந்திரன் நேற்று தொலைக்காட்சியில் பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் இறுதி ஊர்வலத்தைப் பார்த்து கண் கலங்கினார் என்று தெரிவிக்கப்பட்டது.

திருமதி காந்தியின் மரணம் குறித்து அவர் முன்னதாகவே அறிந்திருந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

முதல்வர் பிரதமர் திரு. ராஜீவ் காந்திக்கு இது விடயத்தில் தனது அனுதாபத்தைத் தன்னைச் சந்தித்த பாரதத் தூதரகப் பிரதிநிதி திரு பட்டவர்த்தனிடம் நேற்றுத் தெரிவித்துக் கொண்டாராம். முதல்வரின் கடிதம் பிரதமரிடம் ஒப்படைக்கப்படும் பொருட்டு திரு பட்டவர்த்தனிடம் கொடுக்கப்பட்டது.

பிரதமர் தேர்தலில் பெற்றுள்ள பெரும் வெற்றிக்கும் இக்கடிதத்தில் முதல்வர் பாராட்டுத் தெரிவித்துள்ளார் என்றும் கூறப்பட்டது.

## எதிர்க்கட்சிகள் கோரிக்கை

(புதுடில்லி)

கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டவர்களும் உறுப்பினர் பதவியை இழந்தவராகக் கருதப்படுவர் என்ற கூற்று கட்சித்தாவல் தடை மசோதாவிலிருந்து அகற்றப்பட வேண்டும் என்று தெலுங்கு தேசம், ஜனதா, சி. பி. ஜே, காங்கிரஸ் (எஸ்), பி. ஜே. பி முதலான எதிர்க்கட்சிகள் மத்திய அரசைக் கோரியுள்ளன.

இம்மசோதா இம்மாத இறுதியில் சட்ட உருப்பெறும் எனத் தெரிகிறது.

### எதியோப்பிய பஞ்சம் - பட்டினி

# வாக்குறுதியை நிறைவேற்ற அமெரிக்கா தவறிவிட்டதாம்

(அடிஸ் அபாவா)

எதியோப்பியாவில் பஞ்சத்தாலும், பட்டினியாலும் அவதியுறும் மக்களுக்கு நிவாரண உதவிகள் அளிப்பதாக அமெரிக்கா உறுதியளித்திருந்தது. ஆனால் அவ்வாக்குறுதி இன்னமும் நிறைவேற்றப்படவில்லை என்று அடிஸ்அபாவா அறிக்கைகள் நேற்றுத் தெரிவித்தன.

எதியோப்பிய மக்களின் கஷ்டநிலை குறித்து அன்னை திரேசா நேரில் கண்டுவேதனை தெரிவித்திருந்தார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## ஜேர்மனி பாரத தொடர்பு

(புதுடில்லி)

ஜேர்மன் ஜனநாயகக் குடியரசும் பாரதமும் கப்பல் போக்குவரத்துத் தொடர்பான உடன்பாடு ஒன்றினை பம்பாயில் செய்து கொண்டுள்ளன.

சாந்தி - (யாழ்நகர்)
12-1-85 முதல்
10 30, 2.15 மட்டும்
கமல், சுலக்ஷனா, ராதா, தங்கவேலு நடித்த
A. V. M. இன்
தூங்காதே தம்பி தூங்காதே
(ஈஸ்மன் கலர்)

# ஈழமுரசு

## இரு பத்திரிகை நிருபர்கள் அனுராதபுரத்தில் கைது!

(கிளிநொச்சி)

இரண்டு பத்திரிகைகளின் பிராந்திய நிருபர்கள் என்று அடையாளம் காணப்பட்டுள்ள, இருவர் நேற்று அனுராதபுரத்தில் வைத்து பாதுகாப்புப் படையினரால் சந்தேகத்தின்மீது கைது செய்யப்பட்டனர். விசாரணையின் போது இவர்கள் இருவரும் கிளிநொச்சிப் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்று தெரியவந்தது. கிளிநொச்சி நகரையும் திருநகரையும் முகவரியாகக் கொண்ட இவர்கள் இருவரைப் பற்றிய பூரண தகவல்களை உடன் அனுப்பி வைக்குமாறு அனுராதபுரம் பொலிஸார் கிளிநொச்சி பொலிஸாருக்குத் தகவல் கொடுத்துள்ளனர்.

### நீதிமன்றம் பிறப்பித்தது; செயற்படக் கூடாதென்று

# புலோலி ப. நோ. கூ. சங்க இயக்குநர் சபைக்கு இடைக்கால தடை உத்தரவு!

(புலோலி நிருபர் மா. சிவகுமாரன்)

புலோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க இயக்குநர் சபையைச் செயல்படக் கூடாதென பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம் இடைக்கால தடை உத்தரவு பிறப்பித்துள்ளது. இதனையடுத்து இப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க இயக்குநர் சபை செயலிழந்துள்ளது.

புலோலி ப. நோ. கூ. சங்க இயக்குநர் சபை உறுப்பினர்கள் தெரிவு செல்லுபடியாகாதென்றும், செல்லுபடியாகாத இவ் இயக்குநர் சபை சங்கத்தைப் பரிபாலிப்பதால் பொது மக்களுக்கு ஈடுமீளா நட்டமேற்படுமென்றும் எனவே இது சம்பந்தமான விசாரணைகள் முடியும் வரை இவ் இயக்குநர்சபை செயற்படுவதைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்று சங்க அங்கத்தவரான கூவிலைச் சேர்ந்த கிட்டிணன் சந்திரசேகரம் என்பவர் சட்டத்தரணி எம். கே. முத்துக்குமாரு மூலம் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில் மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

இம்மனு மீதான விசாரணையை மேற்கொண்ட பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திரு. ரீ. யோகநாதன் இவ் இயக்குநர் தெரிவு சம்பந்தமான விசாரணைகள் முடியும் வரை சங்கத்தின் இயக்குநர் சபை செயல்படக் கூடாதென இடைக்கால தடையுத்தரவைப் பிறப்பித்தார்.

மனுதாரரின் விண்ணப்பத்திற்கு மாறாக இயக்குநர் சபை உறுப்பினர்கள் காரணம் காட்டுவதற்கு அடுத்த மாதம் 15ம் திகதிவரை நீதவான் அவகாசம் வழங்கியுள்ளார்.

## ஜனாதிபதி : இனவாதமே பயங்கரவாதமாகியுள்ளது

பயங்கரவாதம் ஆரம்பத்தில் இனவாதமாகவே இருந்தது. ஆனால் அது இப்போது வேறு வடிவத்தை அடைந்துள்ளது ஜனநாயக அமைப்புக்களைத் தவிடு பொடியாக்கிவிட்டு தமது ராஜ்யம் ஒன்றை அமைப்பதே இவர்களது இன்றைய நோக்கமாகவுள்ளது என்று ஜனாதிபதி திரு ஜே. ஆர் ஜெயவர்த்தனா நேற்று கொழும்பில் நடைபெற்ற வைபவமொன்றில் உரையாற்றுகையில் கூறினார்.

பயங்கரவாதம் எந்த உருவத்தில் வந்தாலும் அதனை எதிர்க்கவேண்டும் எனக் கேட்டுக்கொண்ட ஜனாதிபதி பயங்கரவாதத்தை விரைவாக முறியடிக்க அரசாங்கம் உறுதி பூண்டுள்ளது. ஆயுதப்படைகள் பயங்கரவாதத்தை ஒழிப்பதில் பெரும்பங்கு வகித்துள்ளது. அவர்கள் தமது உயிரைக் கூட பலி கொடுத்துள்ளார்கள் என்றும் கூறினார்.

## ஸ்ரீமாவோவை மட்டும் துரோகி எனக் கூறமுடியாது

(கொழும்பு)

அப்பாவித் தமிழ் மக்கள் பாதுகாப்புப்படைகளால் சுட்டுக் கொல்லப்படுவதாக திருமதி பண்டாரநாயக்கா மட்டுமல்ல ஜனாதிபதி, தேசிய பந்தோபஸ்து அமைச்சர் ஆகியோர்கூட கூறியிருக்கிறார்கள். எனவே திருமதி பண்டாரநாயக்காவை மட்டும்துரோகி என்று கூறமுடியாது என்று எதிர்க்கட்சித் தலைவர் திரு அநுரா பண்டாரநாயக்கா பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையில் கூறினார்.

வடக்கு, கிழக்குப் பகுதிகளில் மட்டுமன்றி நாட்டின் ஏனைய பகுதிகளிலும் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட அரசாங்கம் தவறிவிட்டது என்று கூறிய அநுரா பண்டாரநாயக்க, யாழ்தேவி தாக்கப்பட இருப்பது பற்றி அரசுக்கு முன்னரே தெரிந்திருந்தும் கூட போதிய பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்கவில்லை.

தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் இனிமேல் பேச்சுவார்த்தைக்கு இடமே இல்லை என்ற நிலைமைக்கு அரசாங்கம் வந்துவிடக் கூடாதெனவும் திரு. அநுரா பண்டாரநாயக்கா கூறினார்.

## வெளி மாவட்டத்தில் கடமை புரியும் யாழ். ஆசிரியர்கள்

(அரியாலை)

யாழ்ப்பாணத்துக்கு வெளியேயுள்ள பதினொருமாவட்டங்களில் கடமையாற்றும் ஆசிரியர்களில் பலரும் போக்குவரத்து இல்லாத காரணத்தால் தமது பாடசாலைகளுக்கு செல்ல முடியாதிருக்கும் அவல நிலையை நேற்று யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கத்தை அவரது அலுவலகத்தில் சந்தித்து விளக்கினர்.

நுவரெலியா, கண்டி, திருமலை, மட்டக்களப்பு, கொழும்பு மாவட்டப் பாடசாலைகளின் ஆசிரியர்களே இதில் பெரும்பாலும் பாதிக்கப்பட்டுள்ளனராம்.

இம்மாதம் 19ம் திகதியிலிருந்து தாம் செல்ல முடியாதிருப்பதால் தமக்கு விசேஷ லீவு வழங்கப்பட வேண்டும் என்று இவர்கள் அரசாங்க அதிபரிடம் வேண்டுகோள் விடுத்தனர்.

ஒவ்வொரு மாவட்டத்தைச் சேர்ந்த ஆசிரியர்களதும் விண்ணப்பங்களை தனித்தனியாகத் தொகுத்துத் தம்மிடம் தருமாறும், விசேஷ லீவுவழங்குமாறு சிபார்சு செய்து அவைகளைக் கல்வி அமைச்சு அதிகாரிகளுக்கு அனுப்பி வைப்பதாகவும் அரசாங்க அதிபர் உறுதியளித்தார்.

### விசேஷ லீவு கேட்கிறார்கள்!

### விரும்பிய பல...

1-ம் பக்கத் தொடர்

அங்கு நின்ற இவர்கள் ஆஸ்பத்திரிச் சந்தியிலிருந்து, சத்திரத்துச் சந்தி வரையான சகல கடைகளிலும் தமது கைவரிசையைக் காட்டினார்களாம்.

டயறிகள், பவுடர்டின்கள், வாசனைத் திரவியங்கள், உணவுப்பொருட்கள் உட்பட பல்வேறு வகையான பொருட்களும் எடுத்துச் செல்லப்பட்டதாகவும் இது தொடர்பாக அரசாங்க அதிபரைச் சந்தித்து முறையிடவிருப்பதாகவும் பல வர்த்தகப் பிரமுகர்கள் தெரிவித்தனர்,

### கிளிநொச்சி...

— 1-ம் பக்கத் தொடர்

வர்களே பயணம் செய்தனராம். அதேவேளை, புகையிரத நிலைய பிளாட்பாரத்தில் குண்டொன்றும் வெடிக்க வைக்கப்பட்டதாம். இவ்விடயங்கள் பற்றி அப்போது கடமையிலிருந்த ஐவருமே விசாரணைக்காக வவுனியா கொண்டு செல்லப்பட்டனர்.


**கொழும்பு பஸ் சேவை**

பிரயாணிகளின் வேண்டுகோளுக்கிணங்க ஞாயிறு, செவ்வாய், வியாழன ஆகிய வாரத்தின் மூன்று தினங்களில் பகல் சேவை 27-1-85 தொடக்கம் நடைபெறும்.

**SAFETY TRAVELS**


### இடைத்தேர்தல்களை..

1-ம் பக்கத் தொடர்

காவலில் இருக்கின்றனர். அல்லது நாட்டைவிட்டு ஓடிவிட்டனர். இந்நிலையில் தேர்தலை நடத்த முடியாதென இங்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றத்தில் கூட்டணிக்கு அருக்கும் பதினாறு இடங்களில் நான்கு தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் நடத்த இருப்பதாக இலங்கை அரசு அறிவித்திருக்கிறது. 1983 ஆகஸ்டில் ஆமோதிக்கப்பட்ட இலங்கை அரசியல் சாசனத்தின் ஆறாவது சரத்தின்படி தமிழர் விடுதலைக் கூட்டணியின் உறுப்பினர்கள் பாராளுமன்றத்திலிருந்து நீக்கப்பட்டனர் வடக்கு கிழக்கு மாகாணங்களில் இரண்டு தொகுதிகளில் இடைத் தேர்தல்கள் நடத்தப்படவிருக்கின்றன. ஆகவே தமிழ் மக்கள் இதனைப் பகிஷ்கரிக்க வேண்டும் என்றும் அவ்வேண்டுகோளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வீடிழந்து உயிர்பாதுகாப்புக்காக பல தமிழர்கள் சொந்தக் கிராமத்தைவிட்டு வெளியேறி வாழும் நிலையிலும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் பாதுகாப்பாக வெளியே நடமாட முடியாத நிலையிலும், சுதந்திரமாக பொதுக்கூட்டங்களை நடத்த முடியாத இன்றைய நிலையில் தேர்தலை நடத்துகின்ற முடிவு ஏமாற்று வித்தையாகும் என்றும், கூட்டணி பங்கு

### தீவிரவாதிகளுக்கு..

—1ம் பக்கத் தொடர்

இதுபற்றி அரசாங்கம் ஒரு தீர்மானம் கொண்டு வருமானால் இதைப் பற்றி ஆராயத் தயாராக இருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் திரு. அநுரா பண்டாரநாயக்கா சபையில் தெரிவித்தார்.

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒருமாதம் நீடிப்பது சம்பந்தமான பிரேரணை 128 வாக்குகளைப் பெற்று நிறைவேறியது. எதிர்க்கட்சிகள் எதுவும் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை கடந்த ஒரு மாதகாலமாக வடக்கு கிழக்கு மாகாணங்களில் இடம்பெற்ற கொலை, கொள்ளை, குண்டு வெடிப்புச் சம்பவங்கள் பற்றிய பூரண அறிக்கையொன்றும் சபையில் சமர்ப்பிக்கப்பட்டது.

### தூதுவர் சத்வா...

—1-ம் பக்கத் தொடர்

பில் தெரிவிக்கப்பட்டுள்ளது

இதற்கிடையில் தமிழ்நாட்டில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் ஏழு கடற்படை வீரரும் இன்று விடுவிக்கப்படலாமென்ப் பிந்திக் கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

பற்றாது என்றும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது

### இலங்கை ..

—1-ம் பக்கத் தொடர்

தூதுவர் திரு எஸ். ஜே. எஸ் சத்வால் இன்று நடைபெறும் இந்திய குடியரசு தினத்தை முன்னிட்டு விடுத்துள்ள செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

இச்செய்தியில் அவர் குறிப்பிட்டுள்ள முக்கிய பகுதி வருமாறு:

இந்தியாவின்பால் இலங்கை மக்கள் பாராட்டும் பட்சமானது ஒருசில மாதங்களுக்கு முன்புகூட, பிரதம அமைச்சர் இந்திராகாந்தி கொலையுண்ட துன்பம் பெருகிய தருணம், சகலதுறையையும் சேர்ந்த இலங்கையர்கள் தமது சோகத்தையும் அதிர்ச்சியையும் வெளிக்காட்டியிருந்த போது, மிகத் தெளிவாகக் காணக்கூடியதாக இருந்தது. ஸ்ரீமதி காந்தியின் மரணச் சடங்குகளில் கலந்துகொள்ள முதன்முதலில் வருகைதந்திருந்த வெளிநாட்டுப் பிரமுகர்களுள் ஜனாதிபதி திரு. ஜெயவர்த்தன ஒருவர்.

இலங்கை மக்களிடமிருந்து கிடைத்த அனுதாபச் செய்திகள் எம்மை முற்றாக ஆட்கொண்டுவிட்டிருந்தன. அவற்றுக்காக எனது மனப்பூர்வமான நன்றியை மீண்டும் ஒருமுறை தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்றமாதம்தான் உலகின் மிகப்பிரமாண்டமான ஜனநாயக முறையான பொதுத் தேர்தல்களை நாம் இந்தியாவில் நடத்திமுடித்தோம். இதன்மூலம் மக்கள் முன்னென்றுமில்லாதவாறாக பிரதம அமைச்சர் ராஜீவ்காந்தியிடம் அதிகார பலத்தை வழங்கியுள்ளனர். அப்பொழுது, இலங்கையுடன் இந்தியாவின் உறவுகளை வலுப்படுத்தும் விருப்பத்தை அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை மக்களுக்குச் சமாதானமும் சௌபாக்கியமும் உண்டாகுக என நான் வாழ்த்துகிறேன். எதிர்வரும் ஆண்டுகளில் இந்திய-இலங்கை ஒத்துழைப்பானது எமது பரஸ்பர நன்மையின் பொருட்டு, மேலும் புதிய துறைகளுக்கு விரிவடையும் என நான் நம்புகிறேன்.

### சடலம் ஆஸ்பத்திரியில்

பழைய பூங்காவீதியில் நேற்று முன்தினம் சுட்டுக் கொல்லப்பட்ட பியதாசா என்பவரது சடலம் நேற்றுக் காலை பாதுகாப்புப் படையினரால் யாழ் அரசினர் வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது. இதனால் கச்சேரிப் பகுதியிலும், நகரிலும் சிறிது பதற்றம் நிலவியது

### கறுப்புக் கண்ணாடி யாருடையது?

யாழ்ப்பாணத்திலிருந்து காரைநகருக்குச் சென்ற பஸ்ஸில் கைவிடப்பட்டிருந்த கறுப்புக் கண்ணாடியை யாழ். விலமதிப்பீட்டுத் திணைக்களத்தைச் சேர்ந்த சி. அம்பலவாணர் கண்டெடுத்து ஈழமுரசு காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளார். உரியவர் அலுவலக நேரத்தில் நேரில்வந்து அடையாளம் காட்டிப் பெற்றுக் கொள்ளலாம்.

### ஒருவர் மட்டும் விடுதலை

(சுழிபுரம்)

கடந்த டிசம்பர் மாத நடுப்பகுதியில் சுழிபுரம் பகுதியில் கைதாகி காலி பூஸா முகாமில் தடுப்பில் வைக்கப்பட்டிருந்த 32 பேரில் ஒரே ஒருவர் மட்டுமே விடுவிக்கப்பட்டுள்ளார். கிருஷ்ணன் மகேந்திரராசா என்பவரே விடுதலையானவர் மேலும் விடுதலை செய்யப்படாதவர்களில் பெரும்பாலானோர் மாணவர்கள் என்று கூறப்படுகிறது.

### ஏழு தபால்..

—1-ம் பக்கத் தொடர்

கிய இளைஞர்கள் பணம், முத்திரை ஆகியவைகளைக் கொள்ளையடித்தனர்.

திருநெல்வேலி பல்கலைக் கழக உப தபாலகத்துக்கு இரண்டு சைக்கிள்களில் சென்ற நான்கு துப்பாக்கி இளைஞர்கள் சுமார் மூவாயிரத்து ஐநூறு ரூபா பணத்தைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

மற்றைய ஆறு தபால்நிலையங்களிலும் முத்திரைகளும், பணமும் கொள்ளைபோனதாக புகார் செய்யப்பட்டுள்ளதாயினும், அவற்றின் பெறுமதி பற்றி உத்தியோக பூர்வமாகத் தெரிவிக்கப்படவில்லை.

கடந்த மூன்றுநாட்களிலும் வடக்கில் பத்து தபாலகங்களில் கொள்ளையடிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

'ஈழமுரசு' சாயப பா அடவார்டைசிங் அச்சகப்பெயதுல் ஸ்தாபனத்தாரால், 37, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 26-1-85 சனிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.